Registerad as a News Paper பக்கங்கள் 04 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2203 கார்த்திகை 01 (16-11-1992) திங்கட்கிழமை ஓசை 272

## கிளிநொச்சி மாவட்டத்தில் மலேரியா நோய் அதிகரிப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் மலேரியாவின் தாக்கம் அதிகரித்துச் செல்வதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. சென்றவருடம் முழுவதிலும் இம் மாவட்டத்தில் மலேரியா நோயின் தாக்கத்திற்கு 17495 பேரும் மூளை மலேரியா நோயின் தாக்கத்திற்கு 2374 பேரும் மட்டுமே பாதிக்கப்பட்டிருந்தனர். ஆனால் இவ்வருடத்தின் செப்டம்பர் மாதத்தின் முடிவு வரையில் மட்டும் மலேரியா நோய்க்கு 8760 பேரும் மூளை மலேரியா நோய்க்கு 1500 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். செப்டம்பர் மாதத்தின் பின்னர் வரும் வருடத்தின் இறுதிப் பகுதியில்தான் மலேரியாவின் தாக்கம் அதிகமாகப் (4 ஆம் பக்கம் பார்க்க)

# ஆர்ஜன்ரீனாவிடம் போர் விமானங்கள் கொள்வனவு செய்ய சிறிலங்கா முடிவு

## ஆறு 'புக்காரா' விமானங்கள் 25 கோடி ரூபாவிற்கு கிடைக்குமாம்

(கொழும்பு)

ஆர்ஜன்ரீனாவிடமிருந்து 'புக்காரா' ரக போர் விமானங்களை கொள்வனவு செய்ய சிறிலங்கா அரசு முயன்று வருவதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரான்சில் தயாரிக்கப்பட்ட ஆறு 'புக்காரா' ரக விமானங்களை 25 கோடி ரூபா செலவில் வாங்குவதற்கான நடவடிக்கைகளில் சிறிலங்கா அரசு ஈடுபட்டிருப்பதாகவும் இக் கொள்வனவு தொடர்பாக ஒப்பந்தம் ஒன்றை செய்துகொள்ள ஆர்ஜன்ரீனாவைச் சேர்ந்த அதிகாரிகள் சிலர் கொழும்பு வந்திருப்பதாகவும் இச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன,

கடந்த சில மாதங்களாக சிறிலங்கா விமானப்படைக்கு புதிய போர் விமானங்களை கொள்வனவு செய்ய சிறிலங்கா அரசாங்கம் தீவிரமாக ஆலோசித்து வந்தது இவ் வருட ஆரம்பத்தில் சீனன் குடாவில் ஏற்பட்ட பாரிய குண்டு வெடிப்பு, ஆனையிறவில் விடுதலைப் புலிகளால் ஹவ-8 விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டமை, பாவனையிலுள்ள பல விமானங்கள், உலங்கு வானூர்திகள் என்பன சேவையில் ஈடுபடுத்தமுடியாத நிலையில் பழுதடைந்து போயுள்ளமை சீனாவிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஜெட் விமானங்கள் போர்முனையில் பயன்படுத்தப முடியாத நிலை என்பன வற்றைத் தொடர்ந்தே விமானப் படைக்கு புதிய விமானங்களைக் கொள்வனவு செய்ய சிறிலங்கா அரசாங்கம் தீவிர முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது.

ஆரம்பத்தில் எந்த நாட்டிடம் இருந்து விமானங்களைக் கொள்வனவு செய்வதுஎன்பது குறித்து தீவிரமாகப் பரிசீலிக்கப்பட்டதாகவும் பின்னர் ஆர்ஜன்ரீனாவிடமுள்ள 'புக்காரா'விமானங்களை கொள்வனவு செய்வது என சிறிலங்கா விமானப்படை அதிகாரிகள் முடிவு செய் தாகவும் தெரியவருகிறது.

இதே வேளை 'புக்காரா' விமானக் கொள்வனவு குறித்து சிறிலங்கா பாதுகாப்பு வடாரங்களில் சிலர் அதிருப்தி கொண்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. 1986 ஆம் ஆண்டின் பின் புக்காரா விமானங்களின் உற்பத்தி வீழ்ச்சி கண்டுள்ளது என்பது அதிருப்தியாளரின் குற்றச்சாட்டாகும்.

## பிரான்சிடம் போர் தளபாடம் சிறிலங்கா பெற முயற்சி

வடக்கு கிழக்கு யுத்தத்திற்குத் தேவையான போர் ஆயுதங்களைப் பெறுவதில் பிரான்ஸ் நாட்டின் உதவியைப் பெறுவதற்கு சிறிலங்கா அரசு திட்டமிட்டுள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

அத்துடன் சிறிலங்காவிற்கான ஆயுத விற்பனை தடை நீக்கப்பட்டதை அடுத்து பிரிட்டனிடமிருந்தும் ஆயுதங்களை பெற சிறிலங்கா அரசு முயற்சி செய்யக்கூடும் எனவும் அச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

## அமைச்சர்கள் குழு கிழக்கிற்கு விஜயம்

(கொழும்பு)

வடக்கு. கிழக்குப் பகுதியில் போரில் ஈடுபட்டுள்ள படையினரின் சேமநல வசதிகளை நன்கு கவனித்துக் கொள்ளுமாறு சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா அதிகாரிகளைப் மண்டி.சில்வா எஸ் ஏ அப்துல் மஜித் ஆகியோர் சகிதம் ம காண சபைகள் அமைச்சரும், வெளிவிவகார ராஜாங்க அமைச்சருமான ஜோன் அமரதுங்க வாழைச்சேனை, வெலிககந்த, பள்ளிய கொடல்ல

## விடிவு பற்றி நம்பிக்கையூட்டும் மாவீரர்களின் நினைவுகள்

நாம் நாடோடிகள் அல்ல, நிரந்தரமாய்க் குந்த வொரு நிலமற்ற ஏதிலிகளுமல்ல, இடித்துரைத்தவர்கள் மாவீரர்கள் ''எமக்கென்றொரு பாரம்பரிய பிரதேசமுண்டு, வரையறுக்கப்பட்ட எல்லைகளுண்டு, பாரம்பரிய மொழி எமது, கலை பண்பாடு, பொருளாதார வளம் பாரம்பரியமாய் எமக்குண்டு' ''எம்மை எமக்கே உணர வைத்தவர்கள் மாவீரர்கள்'' ''ஆம், எமது இனம் சுயநிர்ணய உரிமைகளுக்குத் தகுதியுடையதே!'' உலகின் முகட்டையே உலுப்பினர் எமது மாவீரர்கள். இவ்வாறு மாவீரர் நாளையொட்டி தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ். மாவட்ட அரசியல்துறை செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது

''எங்கள் நிலத்தின் ஓரங்குலத்தைக்கூட எதிரியே உனக்கு விட்டுத் தரோம். எமது உரிமைகளின் எள்ளளவிலுங் கூட உனது கை விழ முடியாது! பேசாத இந்த வார்த்தைகளை, வீரத்தின் வழியே வெளிப்படுத்தி நின்றனர் மாவீரர்கள்.

எதிரி ஓட்டமாய் ஓடுகிறான். ஒவ்வொரு நாடாய்க் கையேந்தி நிற்கின்றான். ''எல்லையைக் காப்பாற்ற எனக்கு நிதி கொடுங்கள்!'' பிச்சை கேட்கின்றான். இது (4 ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் நினைவு பந்தல்கள் துரிதகதியில் அமைப்பு

(நமது நிருபர்)

யாழ்.குடா நாடு எங்கும் மாவீரர் எழுச்சி வாரம் நேற்று உணர்வு பூர்வமாக ஆரபபமாகியது.

தமிழீழ மண்மீட்புக்காக நடைபெற்றுவரும் வீரப் போரில் இதுவரை தம்முயிர் ஈந்த மாவீரர்களை நினைவு கூரும் வகையில் நடைபெறும் மாவீரர் வாரத்தை எழுச்சியூட்டும் வகையில் ஆரப்பமாகியுள்ள மாவீரர் எழுச்சி வாரத்தின் முதல் நாளான நேற்றைய தினம் யாழ். குடா நாடு எங்கும் மக்கள் சிரமதானப் பணிகளிலும் அலங்கார வீதி வளைவுகளை அமைப்பதி மூலமாக வீதிகள்,வாய்க்கால்கள், வீதியோரங்களின் பற்றைகள் வெட்டி துப்பரவு செய்தல் போன்ற பணிகளில் அவ்வப் பகுதி மக்கள் ஈடுபட்டனர் பருத்தித்துறை வட்டப் பிரேதேசத்திற்கு கிராமக் (4 ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் நினைவு நிகழ்வுகள்

யாழ். மாவட்ட விடுதலைப் புலிகள் மாணவ அமைப்பும் பாடசாலைகள், தொழில்நுட்பக் கல்லூரி, யாழ் பல்கலைக் கழகம் என்பவற்றுடன் இணைந்து நடத்தும் மாவீரர் எழுச்சி

# அகதிகளாகி அநாதைகளாகிய அம்பாறை தமிழ் மக்கள்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் இராணுவ அட்டூழியங்களால் பாதிககப்பட்டு அகதிகளாகி உள்ள தமிழ் மக்கள் எவராலும் கவனிக்கப்படாத நிலையில் அநாதைகள் போல் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்கள் அகதிகளாக ஆலையடி வேம்பு, காரைதீவு, கல்முனை தமிழ் பிரிவு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் தங்கியிருக்கின்றனர். 13 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த 20498 பேர் அகதி முகாம்களிலும் 10447 பேர் நண்பர்கள் வீடுகளிலும் அகதிகளாக உள்ளனர் கடந்த இரண்டரைவருடங்களில் 648 பேர் காணமல் போயுள்ளனர். இவர்களைப்பற்றி குரல் கொடுப்போர் கிடையாது.

கிழக்கிற்கு வந்த மனித உரிமைப் பிரதிநிதிகள் அம்பாறையில் துன்பமுறும் ஒரு அகதியையோ அல்லது பாதிக்கப்பட்ட எவரையுமோ அல்லது காணமல் போனவரின் குடும்பத்தினரையோ பார்வையிடவில்லை. அவர்கள் மட்டக்களப்போடு திரும்பிவிட்டதாக பாதிக்கப்பட்டவர்கள் புகார் செய்துள்ளார்கள்.

இங்குள்ள தமிழரை, கிழக்கிற்கு விஜயம் செய்யும் மந்திரிகளோ, எம். பி. க்களோ அல்லது புனர்வாழ்வு நிறுவனங்களோ எட்டிப்பார்த்ததும் இல்லை. இவர்கள் நிலை குறித்து விசாரித்ததும் இல்லை.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியா நகரை சிங்கள மயப்படுத்த திட்டம்

(வவுனியா)

வவுனியா நகரை சிங்கள மயப்படுத்தும் நடவடிக்கையில் சிறிலங்கா இராணுவ அதிகாரிகளும் அரசாங்க அதிகாரிகளும் ஈடுபட்டுள்ளனர்.

இத்திட்டத்தை கருத்தில் கொண்டு தமிழர்கள் அடர்த்தியாக வாழும் பகுதிகளிலும் சிங்களக் குடும்பங்கள் புதிதாகக் குடியேற்றம் செய்யப்படுகின்றனவாம்.

வவுனியா நகரிற்குத் தெற்கே சிங்களவர்களின் ஆதிக்கம் வலுத்திருப்பதாகவும், சிங்கள அரச அதிகாரிகள் இராணுவத்துடன் கூட்டுச் சேர்ந்து இத்திட்டத்தை விரைவாகச் செயல்படுத்தி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சமீபத்தில் வவுனியா நகரில் மறைந்த இராணுவத் தளபதி டென்சில் கொப்பேகடுவவின் சிலை திறந்து வைத்ததும் இந்த சிங்கள மயப்படுத்தும் திட்டத்தின் ஒரு நடவடிக்கைதான் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலை தொடர்ந்தால் வவுனியா மாவட்டமே சிங்கள மயமாவதைத் தவிர்க்க முடியாது என்று தமிழ் அரசாங்க ஊழியர் ஒருவர் தெரிவித்தார். (நி)


## வீடியோ படப்பிடிப்பாளர்கட்கு.....

யாழ். மாவட்டத்தில் வீடியோ படப்பிடிப்பு செய்யும் சகலருக்குமான கூட்டமொன்று 1992 11-16 [திங்கள்] காலை 10மணிக்கு நிதர்சனம் செயலகத்தில் நடைபெறும். சகல வீடியோ படப்பிடிப்பாளர்களும் இக் கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளவும்.

பொறுப்பாளர்,
**நிதர்சனம்,**
நீப் வீதி,
திருநெல்வேலி.

(3638)


மாறு சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா அதிகாரிகளைப் பணித்துள்ளார். இதையடுத்து பாதுகாப்பு ராஜாங்க அமைச்சின் செயலாளர் ஏயர்சீப் மார்ஷல் வால்டர் பெர்னாண்டோ, பாராளுமன்ற உறுப்பினர்கள் சூரியாராச்சி சந்திர

துங்க வாழைச்சேனை, வெலிககந்த, பள்ளியகொடல்ல மற்றும் சில இடங்களுக்கும், கிழக்கு மாகாணத்தின் சில இராணுவ முகாம் பிரிவுகளுக்கும் விஜயம் செய்து துருப்புகளின் நிலைமையைப் பார்வையிட்டார்.

...ப் பணிகளிலும் அலங்கார வீதி வளைவுகளை அமைப்பதிலும் ஈடுபட்டிருந்தனர்.

**வடமராட்சியில்:-**

பருத்தித்துறை, கரவெட்டி மற்றும் வடமராட்சி வடக்கு, கிழக்கு வட்டவை பகுதிகளின் கழகம் என்பவற்றுடன் இணைந்து நடத்தும் மாவீரர் எழுச்சி வார மாவீரர் நினைவுக் கூட்டமும், கலை நிகழ்ச்சிகளும் இன்று வடமராட்சி கல்விக் கோட்டத்தில் பருத்தித்துறை வட இந்துமகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

# 'குவேக்கர்ஸ்' முயற்சியில் தடங்கல்; யுத்த நிறுத்தத்திற்கு வாய்ப்பில்லை

## ஹமீத்தின் அறிவிப்பின் பின்பே அடுத்தகட்ட முயற்சியாம்

(கொழும்பு)

குவேக்கஸ் சமாதானக் குழுவினரின் முயற்சிகளில் முட்டுக்கட்டைகள் ஏற்பட்டுள்ளதாக சிறிலங்கா அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பத்திரிகை தெரிவிக்கின்றது

இருப்பினும் அமைச்சர் ஹமீத்தின் அறிவிப்பைப் பொறுத்தே அடுத்த கட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படும் எனவும் அப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது

அண்மையில், சமாதான முயற்சிகளை மேற்கொண்டு யாழ். வந்திருந்த குவேக்கஸ் சமாதானக் குழுவினர் விடுதலைப் புலிகளின் பிரமுகர்களுடன் இரண்டு கட்டமாகப் பேச்சுக்கள் நடத்தியமையும் தெரிந்ததே இதில் விடுதலைப் புலிகள் தமதுநிலைப்பாட்டை குவேக்கஸ் குழுவினருக்கு எடுத்து விளக்கியதோடு, இனப் பிரச்சினைக்கு ஆக்கபூர்வமான முயற்சிகளை அரசாங்கமே மேற்கொள்ளவேண்டும்' எனவும் குறிப்பிட்டிருந்தனர்.

இதன் பிற்பாடு கொழும்பு திரும்பிய குவேக்கஸ் சமாதானக் குழுவினர் புலிகளின் நிலைப்பாடு குறித்து அரசிற்கு விளக்கியதாகத் தெரியவருகிறது. ஆனால் தற்பொழுது குவோக்கஸின் சமாதான முயற்சிக்கு சாதகமான சூழ்நிலை இல்லை என ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன

இதேவேளை, விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையே போர் நிறுத்தம் கொண்டுவரும் நிபந்தனைகள்பற்றி இணக்கம் ஏற்படாததால் இந்தப் போர் நிறுத்த முயற்சி தடைப்பட்டுவிட்டதாக சண்டேஒப்சேபர் செய்தி வெளியிட்டுள்ளது. ஆனால் குவேககஸின் சமாதான முயற்சிகள் தொடர்பாக செய்தி வெளியிட்டிருக்கும் அரச கட்டுப்பாட்டில் உள்ள தமிழ்ப் பத்திரிகை ஒன்று அமைச்சர் ஹமீத்தின் அறிவிப்பைப் பொறுத்தே விடுதலைப் புலிகளுடனான அடுத்த சுற்றுப்பேச்சுக்கள் நடத்துவது குறித்து அறிவிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளது

## புலிகளுடன் பேசாது தீர்வு சாத்தியமற்றது

### அரசியல் வட்டாரங்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத் தெரிக் குழுவினர் விடுதலைப் புலிகள் அமைப்புடன் இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் குறித்துப் பேச்சு வார்த்தை நடத்துவதில்லை என்று எடுத்துள்ள முடிவு, தவறானது என்று கொழும்பில் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது

விடுதலைப் புலிகளுடன் பேசாத நிலையில் இனப்பிரச்சினைக்கு ஓர் இணக்கமானதும், அமைதியானதுமான தீர்வு ஏற்படும் என்பது சாத்தியமற்றது என்பதே இவர்களின் கருத்தாகும்.

**கொழும்பில் சில மாதங்களில்**

## சமாதானத்துக்கான ஊர்வலம் நடத்த முடிவு

(கொழும்பு)

சிறிலங்காவில் சமாதானம் நிலவவேண்டி ஒரு சில மாதங்களில் கொழும்பில் சமாதானத்திற்கான ஊர்வலம் ஒன்று நடைபெறவுள்ளது.

நடைபெறவுள்ள இவ் ஊர்வலத்தில் பொது அமைப்புக்களும், சமாதானத்தை விரும்பும் மக்களும் பெருமளவில் கலந்து கொள்வர் என இதன் ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

மேற்படி ஊர்வலம் நடைபெறும்பட்சத்தில் அது பாராளுமன்ற தெரிவுக் குழுவின் நடவடிக்கைகளை வெகுவாகப் பாதிக்கும் என கொழும்பில் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை தெரிவுக்குழு

(4 ஆம் பக்கம் பார்க்க)

**தாயகத்தோடு சங்கமமே யாகிவிட்ட தூயவர்கள் மாவீரர் துதி**

## வரி விளம்பரம்

**பற் சிகிச்சை நிலையம்**

பற் சிகிச்சை நிலையம், (கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு எதிரில் கே கே எஸ் வீதி, கொக்குவில்) தினசரி; 4 பி ப. — 6 பி. ப. ஞாயிறு; 10 மு. ப. — 2 பி. ப.
(3215)

**டில்கா வாச் வேக்ஸ்**

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள எம்மை நாடுங்கள். (சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு.) தரமான கடிகாரங்கள், றேடியோக்கள் நியாய விலைக்கு விற்றுத் தரப்படும். டில்கா வாச் வேக்ஸ், 284 ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். கிளை: பஸ் நிலையம், சாவகச்சேரி.
(சி 5399)

**தென்மராட்சி வாடிக்கையாளர்கட்கு**

தென்மராட்சி மக்களுக்கு டில்காவின் சேவை! உங்கள் கடிகாரங்கள், றேடியோக்கள் யாவும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல பற்றறிகளும் எம்மிடம் உண்டு டில்கா வாச்வேக்ஸ் பஸ் நிலையம், சாவகச்சேரி.
(சி-5400)

**மாணவர்களுக்கு**

பாடசாலைப் பிள்ளைகளுக்கான அப்பியாசக் கொப்பிகள், புத்தகங்கள் மலிவில் விற்பனையாகிறது. றோனியோ குறைந்த விலையில் செய்து கொடுக்கப்படுகிறது. அறிவகம் புத்தகசாலை வெலிங்டன் சந்திக்கருகாமை, யாழ்ப்பாணம்.
(சி-5409)

**நாளை விசுவாமிகள் 41-வது ஜயந்திவிழா**

சுவாமி பிரேமானந்தா ஜியின் ஜயந்திவிழா நாளைசெவ்வாய்கிழமை உடுவில்கிழக்கு-கடவுள் சுவாமிகள் சமரசசன் மார்க்க பிரேமானந்த நிலையத்தில் மலர் பொன்னம்பலம் தலைமையில் நடைபெறும்.
(3647)

**தவறிவிட்டது**

சிதம்பரநாதன் நாகராசா அவர்களின் தேசியஅடையாள அட்டை, கடவுச்சீட்டு ஆகியன வட்டுக்கோட்டைக்கும் மானிப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் நா. சிதம்பரநாதன் அராலி மேற்கு, வட்டுக்கோட்டை என்ற விலாசத்தில் சமர்ப்பித்து சன்மானம் பெறவும்.
(3650)

## கருத்தரங்கு

''சமூக மாற்றத்தை ஏற்படுத்தும் கருவியாகபெண்கள்'' என்னும் தலைப்பில் மகளிர் அபிவிருத்தி நிலையம் இன்று திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் கருத்தரங்கு ஒன்றினை நடாத்தவுள்ளது.

**முதலாமிடத்தை பெற்றனர்**

அகில இலங்கை கத்தோலிக்க விவிலிய பேச்சுப்போட்டியில் யாழ்ப்பாணம் நாவாந்துறைப்பங்கைச் சேர்ந்தவரும், யாழ் திருக்குடும்ப கன்னியர் மட (ஆங்கிலம்) பாடசாலை மாணவியுமான செல்வி மலக்கியாஸ் விக்ரறின் செல்வதி அதிமேற்பிரிவில் முதலாம் இடத்தைப்பெற்றுள்ளார்.

இவருக்குரிய வெள்ளிப்பதக்கத்தை காலி மறை மாவட்ட ஆயர் கலாநிதி டொன்சில்வஸ்ரர் வழங்கினார்.

இதேபோட்டியின் மத்திய பிரிவில் செல்வி லூசியன் எமறின்சுதர்சினி முதலாமிடத்தை பெற்றுக் கொண்டவராவர்

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்
(மட்டுப்படுத்தப்பட்டது)

சகல பொதுச்சபைப் பிரதிநிதிகளுக்கும்

**விசேட பொதுக் கூட்டம்**

**9-12-1992**

எமது சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் 9-12-1992ந்

# எழுச்சிவார கருத்தரங்குகள்

[யாழ்ப்பாணம்]

மாவீரர் எழுச்சிவாரத்தை முன்னிட்டு இன்று இரண்டாவது நாளாக வட்ட அவை ரீதியாக கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

வலிகாமம் கோட்டத்தில் உடுவில் வட்ட அவைப்பிரிவில் உடுவில் மத்தார்ரோட் சனசமூக நிலையத்திலும், சங்கானை வட்டவைப் பிரிவில் தொல்புரம் மத்திய சனசமூக நிலையத்திலும் நல்லூர்வட்ட அவைப் பிரிவில் மூதத விநாயகர் சனசமூக நிலையத்திலும், கோப்பாய் வட்ட அவைப்பிரிவில் உரும்பராய் ஞானவைரவர் சனசமூக நிலையத்திலும் இன்று மாலை 6.30 மணியளவில் அவ்வ பகுதி சிற்றூரவைப் பொறுப்பாளர் தலைமையில் கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

வடமராட்சிக் கோட்டத்தில் கரவெட்டி வட்டஅவைப் பிரிவில் இரவு 7.30 மணியளவில் அச்சுவேலி மகாவித்தியாலயத்தில் அருட்செல்வம் தலைமையில் நடைபெறும் கருத்தரங்கில் தணிகைச் செல்வி, அரசண்ணா ஆகியோர்உரையாற்ற உள்ளனர்.

தென்மராட்சிக் கோட்டத்தில் கைதடி வட்ட அவைப் பிரிவில் இரவு 7.30 மணியளவில் குமாரநகர் சனசமூக நிலையத்தில் யோக்கின் தலைமையில் நடைபெறும் கருத்தரங்கில் அன்பு உரையாற்றுவார்.

கொடிகாமம் வட்ட அவைப் பிரிவில் இரவு 7.00 மணியளவில் கிளாலி சிவா சனசமூக நிலையத்தில் தென்னவன் தலைமையில் நடைபெறும் கருத்தரங்கில் அனந்தா உரையாற்றுவார்.

பளை வட்ட அவைப் பிரிவில் இரவு 7.00 மணியளவில் கேசவன், தமிழ்ச்செல்வன், அப்பன் ஞாபகார்த்த பாலர்

**மாவீரர் எழுச்சி வாரம் நிகழ்ச்சிகள் இரண்டாம் நாள்**

பாடசாலையில் நக்கீரன்தலைமையில் நடைபெறும் கருத்தரங்கில் தமிழ்மங்கை உரையாற்ற உள்ளார்.

சாவகச்சேரி வட்டத்தில் இரவு 7.00மணியளவில்மட்டுவில் கிழக்கு மோகனதாஸ் சனசமூக நிலையத்தில் அன்பு தலைமையில் நடைபெறும் கருத்தரங்கில் தமிழ் மங்கை உரையாற்றவுள்ளார்.

தீவகம் கோட்டத்தில் கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் இரவு 7.00 மணியளவில் நாவற்குழி லவனிதா குடியிருப்பில் தேவன் தலைமையில் நடைபெறும் கருத்தரங்கில் சேரலாதன், கயல்விழி ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

கடற்புலிகளால் தாளையடி வட்டத்தில் பிற்பகல் 5.00 மணியளவில் தாளையடி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையிலும் வடமராட்சி வடக்கு வட்டத்தில் முற்பகல் 10.00 மணியில் ஆழியவளை கோவிலடி சனசமூக நிலையத்திலும் பிற்பகல் 4.00 மணியளவில் வல்வெட்டித்துறை சந்தி சனசமூக நிலையத்திலும் கருத்தரங்குகள் நடைபெறஉள்ளன.

மாணவர் அமைப்பினால் மருதனார்மடக்கல்விக் கோட்டத்தில் பிற்பகல் 4.00 மணியளவில் சுன்னாகம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் மகேஸ்வரராஜ் தலைமையில் நடைபெறும் கருத்தரங்கில் சிவானந்தன், இளங்குமரன், செல்வி ஜனனி, சிவஞானசுந்தரம் ஆகியோர் உரையாற்ற உள்ளனர்.

கடற்புலிகளால் வலிகாமம் கிழக்கு வட்டத்தில் பிற்பகல் 4.00 மணியளவில் கல்யாண மண்டபத்தில் பிற்பகல் 5.00 மணியளவில் ஈச்சமோட்டை சனசமூக நிலையத்திலும் பிற்பகல் 6.00 மணியளவில் சுண்டிக்குளி சனசமூக நிலையத்திலும் கருத்தரங்குகள் நடைபெற ஏற்பாடாகி உள்ளன.

# காலம் தாழ்த்தாது பிரச்சினைக்கு தீர்வு வேண்டும்

## - அதாவுட செனவிரத்னா

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கான தீர்வு காண வேண்டியதில் அரசாங்கத்தின் பங்களிப்பும் பொறுப்பும் மிக முக்கியமானதாகும். இப்பொறுப்பை அரசாங்கம் எவ்விதத்திலும் தட்டிக்கழிக்க முடியாது. இனப்பிரச்சினைக்கு எவ்வாறாகிலும் அரசியல் தீர்வு ஒன்றைக் காண வேண்டும்.

இவ்வாறு ஐக்கிய சோசலிச முன்னணியின் கேகாலை மாவட்ட எம். பி யான அதாவுட செனவிரத்னா கடந்த புதன்கிழமை பாராளுமன்றத்தில் பேசும்போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தனதுரையில்; குறிப்பிடுகையில் நாடு பிளவுபடுவதனை நாம் எவரும் விரும்பவில்லை, முதற்தர இராணுவ அதிகாரிகள் முதல் சாதாரண படைவீரர்கள் மற்றும் அப்பாவிப் பொதுமக்கள் வரை இப்போரிலே அநியாயமாக பலியாகிக் கொண்டிருக்கிறார்கள்.

மேலும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் இனப்பிரச்சினை தீர்வுக்கான யோசனையை இதுவரை முன்வைக்கவில்லை. இதனை தீர்த்து வைக்க எதிர்க்கட்சிகளிடம் யோசனையைக் கேட்டு காலம் கடத்திவருகிறது இனிமேலாவது காலம் தாழ்த்தாது இனப்பிரச்சினைக்கு தீர்வு காண அரசு முன்வர வேண்டும்.

இந்தியாவில் நடைமுறையில் உள்ள அதிகாரப் பரவலாக்கலைப் போன்று மாகாண சபைகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கினால் அதற்கு தாம் ஆதரவளிக்க தயாராக இருப்பதாக அதாவுட செனவிரத்னா மேலும் தெரிவித்தார்,

# துணைவேந்தர் நிதியத்திற்கு நிதி வழங்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக 'துணைவேந்தர் நிதியத்திற்கு' வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் உள்ள நலன்விரும்பிகள் மற்றும் அன்பர்கள்பணஅடிப் கல்வி கற்று வருகிறார்கள்

இவர்களுக்குதுணைவேந்தர் நிதியத்தினூடாக(V.C FUND) உதவிவழங்குவதன் மூலம் அவர்களது கல்வி நிலையை மேம்படுத்த உதவும்

# இந்தியபடையுடன் ஓடியோர் அகதிகளுடன் மீண்டும் வருகை

(வவுனியா)

வடக்கு - கிழக்கிலிருந்து இந்தியப்படை வெளியேற்றத்துடன் இந்தியாசென்ற தமிழ்க் குழுக்களின் உறுப்பினர்கள் சிலர், இந்தியாவிலிருந்து திரும்பி வரும் அகதி மக்களுடன் வருகின்றார்கள் என்றும் இவர்களை சிறிலங்கா இராணுவம் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்கிறது என்றும் தெரியவருகிறது.

இந்தியாவிலிருந்து திரும்பிய அகதி மக்களுடன் திருக்கோணமலை, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள அகதி முகாம்களில் தங்கியுள்ள இவர்களைஅடிக்கடி சிறிலங்கா இராணுவம் சந்தித்து வருகிறதாம்.

இந்தத் தமிழ்க் குழுக்களின் உறுப்பினர்கள் சிறிலங்கா இராணுவத்தின் புதிய படைப் பிரிவிற்கு இணைக்கப்படுவதுடன் புலனாய்வு நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்தப்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப் பட்டது. (தி)

# புதிய மாணவர் சிலர் பல்கலைக்கழக பதிவுகளை இன்னும் செய்யவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகத்தில் புதிய கல்வியாண்டிற்கு [1991-92] வெளிமாவட்ட மாணவர்கள் சிலர் இன்னும் தமது பதிவுகளை மேற்கொள்ளவில்லையென பல்கலைக் கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேலும் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பெயர் விபரங்கள் அனுப்பப்படாத மாணவர்கள் மானியங்கள் ஆணைக்குழுவிடம் நேரடியாகத் தொடர்பு கொள்ளும்படி கோரப்பட்டுள்ளனர்.

மேலும் இந்த வருடம் கல்வியாண்டிற்கு பதிவுகளை மேற்கொண்ட வெளிமாவட்ட மாணவர்களில் அனேகமானோர் விரிவுரைக்கு சமுகமளிக்கவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இவர்களுக்கான விரிவுரைகள் யாவும் கடந்த 2-ஆம் திகதி முதல் ஆரம்பமானது தெரிந்ததே.

# முல்லை மாவட்டத்தில் முதலுதவி நூல் வெளியீடு

பரியோவான் படையின் யாழ் மாவட்ட ஆணையாளர் திரு போசன் அவர்கள் எழுதிய ''ஏன் இந்த முதலுதவி'' என்ற நூல் வெளியிடப்பட்டிருக்கிறது.

ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் கடந்த வியாழக்கிழமை காலை 11-00 மணியளவில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் இந்த நூல் வெளியிடப்பட்டது. இப் பாடசாலையில் முதலுதவி நடுநிலை விரிவுரையாளர் பயிற்சியும் நடைபெற்றது.

இவ் வைபவத்தில் முல்லை மாவட்டத் தளபதி திரு. பாண்டியன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார் இவ் வைபவத்தில் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் திரு. நாவண்ணன், ஒட்டுசுட்டான் பிரதேசப் பொறுப்பாளர் திரு. கலையரசன்,முல்லைமாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் திரு. ஜெனடி ஆகியோர் உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர். தளபதி திரு பாண்டியன் உரையாற்றும்போது மருத்துவ, சுகாதார வசதிகள் அற்ற ஒரு சூழ்நிலையில் இம் முதலுதவிப் பயிற்சி இம் மாவட்ட மக்களுக்கு பயன் உடையதாகவும் நம்பிக்கை அளிப்பதாகவும் இருந்ததாகக் கூறினார். (க)

# பேசாலையில் இரு இளைஞர் கைது

இராமேஸ்வரத்திலிருந்து பெற்றோல், டீசல் மற்றும் பற்றரிகள் கடத்தி வந்ததாகக் கூறி பேசாலையைச் சேர்ந்த இரு தமிழ் இளைஞர்கள் இராணுவத்தினரால் கடந்த வியாழனன்று பேசாலையில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

எமது சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் 9-12-1992ந் திகதி புதன்கிழமை காலை 10-00 மணிக்கு சங்க தற்காலிக பணிமனையில் (பி. எஸ். சேவிஸ் நிலையம், யாழ்ப்பாணம்) சங்கத்தலைவர் திரு. தி. சுந்தரலிங்கம் அவர்கள் தலைமையில் கூட்டப்பெறும். தவறாது கூட்டத்திற்கு சமுகமளித்து ஒத்துழைப்பு நல்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

செயலாளர்,
ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்.

முக்கிய குறிப்பு; கூட்ட நிகழ்ச்சி நிரல் கிடைக்கப்பெறாதோர் தங்கள் கிளையிலோ அல்லது தலைமைக் காரியாலயத்தில் செயலாளருடனோ தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(சி/5407)

## மாவீரர் வளைவு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை துறைமுகம் சந்தியில் கொழும்புத்துறை சனசமூக நிலையமும் ஏனைய பொது அமைப்புக்களும் கூட்டாக இணைந்து மிகப் பிரமாண்டமான மாவீரர் வளைவு, பந்தல்கள் சிரமதானப் பணி மூலம் மிகவும் சிறப்பாகச் செய்து வருவதாக நிலையத் தலைவர் திரு. க. நடராசா தெரிவித்துள்ளார். இப்பகுதிப் பிரதான வீதிகள் உட்பட ஏனைய பகுதிகளும் சிரமதானப் பணிமூலம் செப்பனிடப்பட உள்ளதாக இவர் தெரிவித்துள்ளார். [24]

லும் உள்ள நலன்விரும்பிகள் மற்றும் அன்பர்கள்பணஅடிப்படையிலான உதவியை செய்ய முன்வரவேண்டும் என யாழ். பல்கலைக்கழக நலச்சேவைகள் பிரிவு அன்பான வேண்டுகோளை விடுத்துள்ளது

யாழ் பல்கலைக்கழகத்தில் எழுபது சதவீதமான மாணவர்கள் தாய் அல்லது தந்தையரை இழந்த நிலையிலும், குடும்பவறுமைகாரணமாகவும் மூலம் அவர்களது கல்வி நிலையை மேம்படுத்த உதவும் என மேலும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் நிதியத்திற்கு உதவுவோர் ' நலச்சேவைகள் பிரிவு'' யாழ்.பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். (05)

## வங்கி கடன்களை மீளப்பெற முகவர் நிலையம்

இரு அரச வங்கிகளான இலங்கைவங்கி, மக்கள்வங்கி ஆகியவற்றில் கடன் பெற்று இற்றைவரைமீளச் செலுத்தப்படாமல் இருக்கும்கடன்களை மீளப்பெற்றுக் கொள்வதற்கு முகவர் நிலையம் நிறுவப்பட உள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரானரணில் விக்கிரமசிங்கா அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

மேலும் இக்கடன்களை பெற்றவர்களின் பெயர் விபரமோ கடன்களை வழங்க சிபார்சுசெய்தவர்களின் பெயர் விபரங்களையோ வங்கிசட்ட திட்டத்திற்கு அமைய வெளியிடமுடியாதுள்ளதாக தெரிவித்தார்.

எனினும் கடன்களை வழங்கிய சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எதிராக இலங்கை வங்கியும் மக்கள்வங்கியும் நடவடிக்கைஎடுக்கு மெனவும் இவ் இரு வங்கிகளையும் மீளமைப்புச் செய்வதற்கென ஒதுக்கப்பட்ட 2400 கோடி ரூபாவில் ஒரு பகுதி திருப்பிச்செலுத்தப்படாத கடன்களை ஈடுசெய்ய உபயோகிக்கப்படும்.

1977 ஆம் ஆண்டுக்கு முன்னர் திருப்பிச் செலுத்தப்படாத கடன்களை இந்த ஏஜென்சிகள் ஆராயும் எனவும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில்

## திறந்தபல்கலைக்கழகத்திற்கு விரைவில் மூடுவிழா?

(யாழ்ப்பாணம்)

யாழ். திறந்த பல்கலைக்கழகத்தில பத்திரிகைத்துறையில் டிப்புளோமா பயிற்சிநெறிக்கு விண்ணப்பித்த மாணவர்களின் கற்கைநெறிகள் யாவும் நாவல திறந்த பல்கலைக்கழகத்தினால் இறுதியில் நிராகரிக்கப்பட்டது தெரிந்ததே.

இதேவேளை விண்ணப்பித்த மாணவர்களை நாவல திறந்த பல்கலைக்கழகத்திற்கு மீண்டும் விண்ணப்பிக்குமாறு கோரியுள்ளது.

மேலும் கடந்த வருடம் விண்ணப்பித்து கற்கைநெறியை தொடராதமாணவர்கள் யாழ்ப்பாணம் மக்கள் வங்கிக் கிளையினூடாக மீண்டும் பணத்தைப் பெறுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (05)

## நினைவு கூருகின்றோம் ...
## 1992-11-16

1986-ம் ஆண்டு இதேதினத்தில் அம்பாறை - திருக்கோயில் பகுதியில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த போது, அதிரடிப்படையினரால் கைதாகி முகாமில் வைதது அடித்துக் கொல்லப்பட்ட-

**தவம்** (ஜெயரத்தினம் தவராஜா - திருக்கோயில் - அம்பாறை)

**குரு** (சின்னத்தம்பி பத்மநாதன்)

1987-ம் ஆண்டு உரும்பராய்ப் பகுதியில், இந்தியப் படையினரின் சுற்றி வளைப்பின் போது வீரச்சாவெய்திய-

**அன்சார்** (செல்லையா கணேசலிங்கம்- செல்வபுரம், உரும்பராய் தெற்கு- யாழ். )

அக்கரைப்பற்று, கோளாவில் பகுதியில், இந்தியப் படையினருடனான சமரின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**கோபு** (சண்முகம் இளங்கோ- வீரமுனை,சம்மாந்துறை)

1988-ம் ஆண்டு சங்கத்தானையில், தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட-
நாட்டுப்பற்றாளரான-

**நாகூர்ச்செல்வம் குணாளன்**

இந்தியப்படையினரால் முகாமில் வைத்துப் படுகொலை செய்யப்பட்ட கரவெட்டி, சாமியன் அரசடியைச் சேர்ந்த இருதாயக்கல்லூரி மாணவன்.

1990-ம் ஆண்டு வசாவிளான் பகுதியில், சிறிலங்காப்படையினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

**ஈழம்** (மகாலிங்கம் சுகந்தன்- ஏழாலை மத்தி- யாழ். )

மட்டக்களப்பில். இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்ட மட்டு- ஐயங்கேணியைச் சேர்ந்த இளைஞன்.

1991-ம் ஆண்டு அம்பாறை- கோளாவில் பகுதியில் வீரச்சாவெய்திய-

**சந்திரன்** (கோணேஸ்வரன்- கோளாவில் - அம்பாறை)

மட்டு- மாவடி, முன்மாரிப்பகுதியில், இராணுவத்தால் சுட்டுக்கொலை செய்யப்பட்ட தமிழர்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-5408)


கலிகை சந்தியில் உங்கள் நண்பன் ..............
உங்கள் உற்ற துணைவனாக சேவை செய்கின்றோம்.
எம்மிடம் ஒரு முறை விஜயம் செய்யுங்கள்...... ...
உண்மையின் இரகசியம் தெரியும்.

அன்றும் இன்றும் இனி என்றும்
உங்களுக்கு உகந்த வகையில்

நெல் குற்றியும் மிளகாய் அரைத்தும்
அரிசி தீட்டியும் உழுந்து, பயறு திரித்தும்
தூள் அரைத்தும் கொடுக்கின்றோம்.

நிதான விலையில் நம்பிக்கை நிறைந்த தொழில்
நீங்கள் நாடவேண்டிய இடம்........

**V.P.S.**

**பரஞ்சோதி கிறைண்டிங் மில்**

**கலிகை சந்தி - கரவெட்டி**

(சி-5397)

### சிந்தனைக்கு

நம் சமாதானம் வெற்றி பெற்றவர்கள் சமாதானமாக இருக்கவேண்டும். தோல்வியுற்றோர் சமாதானமாகவில்லை

— ஃபெர்டினாண்டோ ஃபாக்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 16-11-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## போரும், அபிவிருத்தியும் ஒருவழிப்பாதையல்ல

இலங்கையில் உள்ள ஒவ்வொரு பிரஜையும் தலா 2.22.000 ரூபாவை வெளிநாட்டுக் கடனாக செலுத்த வேண்டியிருக்கின்றது மேலும், 1977-ம் ஆண்டிலிருந்து ஆள்வீதக் கடன் தொகை அதிகரித்து வருகின்றது தற்பொழுது. மீளச்செலுத்தப்படாத கடனாக 24 986 மில்லியன் ரூபா உள்ளது. இவ்வாறு மக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பந்துல்ல குணவர்த்தனா தெரிவித்தார்.

இதேவேளை ஆசியாவிலேயே இலங்கையில் தான் வாழ்க்கைச் செலவு வேகமாக உயர்ந்து வருகின்றதென ஆசியச் சஞ்சிகை ஒன்றின் கணிப்பீடு ஒன்று தெரிவிப்பதாக கண்டி மாவட்டச் சுதந்திரக் கட்சி எம். பி யசரத்ன தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அடுத்த வருடத்திற்குரிய பாதுகாப்புச் செலவிற்கென 1800 கோடி ரூபாவை நிதி அமைச்சர் புதிய வரவுசெலவுத் திட்டத்தில் ஒதுக்கியுள்ளார் கடந்த வருடம் பாதுகாப்புச் செலவிற்கென வரவுசெலவுத் திட்டத்தில் 1526 கோடி ரூபா ஒதுக்கப்பட்டதாயினும் பாதுகாப்பிற்கு செலவிடப்பட்ட தொகை 2500 கோடி வரையில் சென்றதாக நிதி அமைச்சரான டி. பி. விஜயதுங்க பொதுக் கூட்டங்களில் பேசும்போது தெரிவித்துள்ளார். அத்தோடு நாளாந்த பாதுகாப்புச் செலவீடானது 27 கோடி ரூபா எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்,

இந்நிலையில் நோக்கும்போது, தலா வீதக் கடன் மட்டுமல்ல தலா வீத இராணுவச் செலவீடும் மிக உயர்வாகவே உள்ளது எனத் தெரியவரும். கடந்த வருடம் 1525 கோடி ஒதுக்கப்பட்டபோது இலங்கையின் தேசிய வருமானத்தில் 6 வீதம் பாதுகாப்பு செலவீட்டிற்கு ஒதுக்கப்பட்டதாக கணிப்பிடப்பட்டது. ஆனால் பின்னைய கணிப்பீடுகள் அதாவது, 2500 கோடி செலவீடு என்பதன் அடிப்படையில் பாதுகாப்புச் செலவீடு 7 வீதத்திற்கும்

# தமிழ் நாட்டில் சூறாவளியால் இறந்தோர் 135ஆக உயர்வு

## இலங்கையைத் தாக்கிய சூறாவளி விளைவித்த அனர்த்தம்

(சென்னை)

மன்னார்ப பகுதியில் மையங்கொண்டிருந்த புயல்வெள்ளிக்கிழமையன்று தூத்துக்குடிகரையைக் கடந்தபோது ஏற்பட்ட மழையினால் தமிழ்நாட்டில் 135பேரும் கேரளத்தில் 25 பேரும் மரணம் அடைந்துள்ளனர். ஆயிரக் கணக்கான மக்கள் தங்கள் வீடு வாசல்களினை இழந்துள்ளதுடன், சில அணைக்கட்டுக்கள் உடைப்பெடுத்ததினால் அதிகமான நெற்பயிர்க்காணிகள் நீரில் மூழ்கியிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இவ் வெள்ளத்தால் மரணமடைந்தவர்களுக்கான குடும்பங்களுக்கு நிவாரணமாக தலா 10 000ரூபா வீதம் நிவாரணம் வழங்கப்படவுள்ளதாக மாநில வருவாய்த்துறை அமைச்சர் அறிவித்துள்ளார். இவை தவிர வீடுவாசல்களை முற்றாக இழந்தவர்களுக்கு 500, ரூபாவும் ஏனையோருக்கு 250 ரூபாவும் வழங்கப்படவுள்ளது

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் இப்புயல் வெள்ளம் காரணமாக 54 பேரும், விக்கிரமசிங்கபுரம் திருவழுவூர் காலனியில் 6 வீடு இடிந்து வீழ்ந்து 37பேரும், பாபநாசசிவன் பகுதியில் வீடு இடிந்து இரண்டு பேரும் திருச்சியில் கட்டடம் ஒன்று இடிந்து விழுந்ததில் 3 பேரும், சிவகிரியிலும், பழங்குடியிலும் நீரினல் அடித்துச் செல்லப்பட்டு இருவரும், கன்னியாகுமரி மாவட்டத்தில் இருவரும் இறந்துள்ளனர். மதுரைமாவட்டத்தில் வெள்ளம் காரணமாக 37 பேர் பலியாகி உள்ளனர்.

சின்ன மனூரில் நிலச்சரிவில் சிக்கி ஆறுபேர் உயிரிழந்தனர்

சிதம்பரனார் மாவட்டத்தில் ஏழு பேர் உயிரிழந்தனர்

ஆத்தூர், சேந்தமங்கலம் குன்னக்காயல் ஆகிய ஊர்களில் தாமிர வரணி ஆற்று உடைப்பினால் வெள்ளம் புகுந்துள்ளது ஆத்தூரில் பத்து அடி உயரம் வரை வெள்ளம் புகுந்திருப்பதால் மக்கள் மாடிகளிலும் மரக்கிளைகளிலும் தஞ்சம் புகுந்து இருப்பதாக சொல்லப்படுகிறது.

தஞ்சை மாவட்டத்திலும் வெள்ளத்தால் மூவர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் பல இடங்களில் கட்டட இடிபாடுகளில் சில சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் மேலும் மீட்புப் பணி வேலைகள் தொடர்ந்து நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் இருபத்தைந்துக்கும் அதிகமான கிராமங்கள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளதாகவும் இக் கிராம மக்களினை மீட்கும் பணியில் படகுகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவை தவிர 250க்கும் மேற்பட்ட படகுகள் சேதமடைந்திருப்பதுடன் ஓர் இலட்சம் வரையிலான மரங்கள் வீழ்ந்துள்ளதாகவும் தெரிவிக்கபடுகிறது.

## காங்கிரசை விமர்சிப்பதை அ.தி.மு.க. நிறுத்த வேண்டும்

- வாழப்பாடி இராமமூர்த்தி

[சென்னை]

அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர்கள் இந்திரா காங்கிரசை விமர்சிப்பதை நிறுத்த வேண்டும்என்று இந்திரா காங்கிரஸ் தமிழ் மாநிலத் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி கூறியிருக்கிறார்.

முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவிடம் தான் இது பற்றிக் கூறியதாகவும் அதன்படி காங்கிரசை விமர்சிப்பது நிறுத்தப்படும் என்றுதான் நம்புவதாகவும் வாழப்பாடி கூறினார்.

கூட்டணிக் கட்சிகளிடையே விமர்சனங்கள் தவிர்க்கப்பட வேண்டும் என்று முதலமைச்சர் ஒப்புக் கொண்டாரென்றும் மூப்பனார் குழுவினர் தமிழக அரசுக்கு எதிராக மேற்கொண்டு வரும் பிரசாரம் குறித்துத்தான் பிரதமர் நரசிம்மராவிடம் புகார் தெரிவித்ததாகவும் வாழப்பாடி சொன்னார்.

இதேவேளை, 25 ஆண்டுகளென்ன 755 ஆண்டுகளானாலும் இந்திரா காங்கிரஸ் ஆட்சியைத் தமிழ் மண்ணில் அமைக்க முடியாது என்று தமிழக போக்குவரத்துத்துறை அமைச்சர் செங்கோட்டையன் கூறினார்.

## மாவீரர் எழுச்சிவார 2-ம்நாள் சிரமதானப் பணிகள்

மாவீரர் வாரத்தின் இரண்டாம் நாளான இன்று யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தீவகம் கோட்டத்தில் நாவற்குழி லவநிதா குடியிருப்பு (முகாம் சுத்திகரிப்பு) திரு. தேவன் தலைமையில் முகாம் மக்களால் துப்புரவு செய்யப்படும்.

வடமராட்சி கோட்டத்தில் சலீம் வீதி சீரமைத்தல் (மூத்த விநாயகர் கோயிலடி) திரு. வைத்தி தலைமையில் மூத்த விநாயகர் சனசமூக நிலையசிற்றூர் மக்களால் சிரமதானம் மேற்கொள்ளப்படும்.

வலிகாமம் கோட்டத்தில் சங்கானை வட்டத்தில் தொல்புரம் வடக்கம்பரை வீதியின் 3/4 மைலினை அல்பேட் தலைமையில் செல்வராசாசனசமூக நிலைய மக்கள் சிரமதானப் பணியை மேற்கொள்வர்.

கோப்பாய் வட்டத்தில் ஆவரங்கால் சந்தையடி வாய்க்கால் பகுதி சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்படும்.

வலிகாமம் கோட்டத்தில் உடுவில் வட்டத்தில் புன்னாலைக்கட்டுவன் தெற்கு வைத்தியசாலையும் மத்தானோடை உள்வீதியும் சிரமதானம்மூலம் துப்புரவு செய்யப்படவுள்ளது.

வலிகாமம் கிழக்கு வட்டத்தில் நாவலடிச்சந்தி துப்பரவு செய்யப்படுவதுடன் பூம்புகார் வீதியும் செப்பனிடப்படவுள்ளது.

